மலர் 1 இதழ் 1 ஜூலை, 2016 ISSN : 2454-3993

# கம்பராமாயணக் கிளைக்கதைகளின் நோக்கம்

**இரா. கவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரி (சுயநிதி)
மதுரை.

**முன்னுரை**

இலக்கியங்கள் படைப்பாளனின் எண்ணங்களையும் பிரதிபலிப்பதாகவும், சமுதாயக் கருத்துகளை வெளிப்படுத்துவனாகவும், மனிதனுடைய உணர்ச்சிகளுக்கு வடிவம் தருவதாகவும் அமைகின்றன. மக்களிடையே பரவலாக உணரப்பட்டிருக்கும் தொன்மைக் கருத்துக்கள் இலக்கிய வகைகளுள் ஒன்றான காப்பியத்தின் மையக்கருத்தாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும். காப்பியங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு, ஒரு தொடர்ச்சியைத் தருவதற்கும், காப்பியப் புலவன் தன் படைப்பு நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகவும் கிளைக்கதைகளைப் படைக்கின்றான். இத்தகைய கிளைக்கதைகள் கம்பராமாயணத்தில் இடம்பெறும் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கிளைக்கதைகள்**

கிளைக்கதை என்ற சொல்லில் உள்ள கிளை என்ற சொல் 'உறவு', 'சுற்றம்' என்ற பொருண்மைகளைத் தரும். இவற்றுள் உறவு என்ற பொருண்மையில் கிளைக்கதை காப்பியங்களில் எடுத்தாளப்படுகிறது. மையக்கதைக்கு உறவுடைய கதை என்ற வகையில் கிளைக்கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிளைக்கதை பற்றிய சிந்தனை முதன் முதலில் கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டிலிடம் இருந்துள்ளது. வடமொழியில் கிளைக்கதைகள் உபாக்கியானம் என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றன. தமிழ்க் காப்பியங்களில் கிளைக்கதைப்பற்றிய சிந்தனையைத் தோற்றுவித்தவர் அடியார்க்கு நல்லார். இருபதாம் நூற்றாண்டில் வ.வே.சு.ஐயர், எஸ்.வையாபுரிபிள்ளை, வ.சுப.மாணிக்கனார் முதலியோர் கிளைக்கதைகளைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

**கம்பர் கிளைக்கதைகளை எடுத்தாண்டதன் நோக்கம்**

வடமொழிக்காப்பியத்தை அடியொற்றியும் தமிழகத்தில் இடம் பெற்றிருந்த இராமாயணக்கதை நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டும் தழுவுநிலைக் காப்பியமாக கம்பர் இராமகாதையைப் படைத்தளித்தார். கம்பர் தம் காலத்திற்கு முன்பு ஆழ்வார்களால் வலியுறுத்தப்பட்டு வலுப்பெற்றுவிட்ட இராமன் திருமாலின் அவதாரம் என்ற கொள்கையை வெளிப்படுத்தும் விதமாகத் தம் காப்பியத்தைப் படைத்துள்ளார். இந்நோக்கத்தை வெளிப்படுத்த வேண்டிக் கம்பர் இராம காதையில் 34 கிளைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். இக்கிளைக் கதைகள் காப்பியத்தைப் படிப்போர் இன்புறுவதற்காகவும், காப்பியத்தை மெருகூட்டுவதற்காகவும், காப்பியத்தலைவனைச் சிறப்பிப்பதற்காகவும், காப்பிய நிகழ்வுகளுக்கு இணைப்பைக் கொடுப்பதற்காகவும், மைய நோக்கத்தை வெளிப்படுத்திடவும் புனையப்பட்டுள்ளன. மேலும் காப்பியத்தின் சுவையைக் கூட்டிப் படிப்போரை மகிழ்விக்கும் நிலையிலும் இக்கிளைக்கதைகள்

அமைக்கப்பட்டள்ளன. இராமன் அவதாரமாக இருந்தாலும் தான் ஒரு மனிதன் என்ற உணர்வில் செயல்பட்டதை வெளிப்படுத்தும் நிலையிலும் கிளைக்கதைகள் அமைக்கப்பட்டுள்ளன. கம்பரால் எடுத்தாளப்பட்டுள்ள கிளைக்கதைகள்.

1. பாத்திரங்களின் சிறப்பை வெளிப்படுத்துவன
   அ) தலைமைப் பாத்திரம் ஆ) துணைமைப் பாத்திரம்
   இ) பாத்திரங்களின் செயல்பாடுகள்
2. காப்பியக்கதைத் திருப்பம்
3. எதிர்நிலைத் தலைவன் குறித்த கதைகள்

என்றவாறுபகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

**பாத்திரங்களின் சிறப்பை வெளிப்படுத்துவன**

கம்பன் காப்பியத்தில் தலைமை மற்றும் துணைமாந்தர்களின் சிறப்பை வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு கிளைக்கதைகளைப் படைத்துள்ளார்.

**தலைமைப்பாத்திரம்**

இராமபிரானின் பிறப்பைப் பற்றிக் கூறுவதாய் அமைந்துள்ள திருஅவதாரக்கதை, இராமனின் சிறப்பை, மேன்மையை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**அவதாரச் சிறப்பு**

காப்பியத்தைப் படிப்போர் தொடக்கத்திலேயே இராமன் திருமாலுடைய அவதாரம் என்பதைப் புரிந்து கொள்ளவும், சிவன் பிரமனை விட திருமாலே உயர்ந்தவர் என்பதை தெளிவுபடுத்தவும், காப்பியத்தின் மைய நோக்கத்தை வெளிப்படுத்தவும் திருஅவதாரக்கதை உருவாக்கப்பட்டுள்ளது.

இராவணனால் ஏற்படும் தொல்லைகளைத் தாங்க முடியாத தேவர்கள், பிரம்மன் சிவனோடு சேர்ந்து திருமாலிடம் முறையிட அவர், தான் தசரதனின் மகனாகப் பூமியில் அவதரிக்கப் போவதாகவும், அச்சமயம் தேவர்கள் எல்லோரும் வானரர்களாகப் பிறப்பெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். முன்னர் நிகழ்ந்திருந்த இந்நிகழ்வை, முக்காலத்தையும் உணரும் தவமேன்மை கொண்டிருந்த தசரதனின் குலகுருவான வசிட்டர் குழந்தை இல்லாத துயரத்தால் வருந்திக் கொண்டிருந்த தசரதனிடம் 'அயோத்தி நாட்டை மட்டுமல்ல ஏழுலகங்களையும் காக்கக்கூடிய ஒருவன் அவனுக்கு மகனாகப் பிறப்பான்' என்று கூறுவதாகக் இக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

அவதாரச் சிறப்பை வெளிப்படுத்தும் நோக்கத்தில் வான்மீகியில் சொல்லப்படாத கம்பரால் மட்டுமே படைக்கப்பட்ட கதையாக இரணியவதைக் கதை இடம் பெற்றுள்ளது. 'தானேகடவுள்' என அகந்தை கொண்டிருந்த இரணியனை திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து அழித்ததை 'இரணியவதைக் கதை' விளக்குகிறது.

எவ்வகையில் எல்லாம் அழிவு ஏற்படுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கூறி, அவ்வகையில் எல்லாம் தனக்கு இறுதி நேரக்கூடாது எனப் பிரமனிடம் வரம் பெற்றிருந்த இரணியன் 'தான்' என்ற அகந்தையோடு செயல்பட்டு திருமாலின் பக்தனும் தன் மகனுமாகிய பிரகாலதனுக்குப் பல்வேறு துன்பங்களைக் கொடுத்ததால் திருமால் நரசிம்மமாகத் தோன்றி வதைத்தார். இப்பொழுது இராமனாக அவதரித்திருப்பவனும் திருமாலே. அதனால்

"இரணியனுக்கு நேர்ந்தைப் போல உனக்கும் அழிவு நேரும் அதற்கு முன்பாக திருந்தி நல்வழிப்பட வேண்டும்" என இராவணனுக்கு எச்சரிகை விடுப்பதாகவும் தவறுகளைத் திருத்தும் நோக்கிற்காகவும் வீடணன் அறிவுறுத்துவதாக இக்கதை கம்பரால் படைக்கப்பட்டுள்ளது.

இராமனின் இறைத்தன்மையை விளக்கிச்சொல்வதற்கும் கிளைக் கதைகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளதைச் சரபங்கன் சபரி கதைகள் வாயிலாக அறியமுடிகிறது. சரபங்கள், சபரி இருவரும் இராமனுக்காகவே காத்திருந்து முக்தியடைந்தனர் என்பதைக் கூறுவதன் வழி இராமனின் இறைத்தன்மை ௌிப்படுத்தப்படுகிறது. மேலும் சுக்ரீவனிடம் சபரி இராமனை ஆற்றுப்படுத்துவதன் வழி காப்பிய நீட்சிக்குக் காரணமாக அமைகிறது. கவந்தன் என்ற அரக்கன், இராமனின் கை தீண்டப்பெற்றதால் சாபவிடை பெற்றுத் தன் பழைய கந்தர்வ உருவை அடைவதைக் கூறுவதன்வழி இராமனின் சமயோசிதபுத்தியையும், இறைத்தன்மையயையும் அறிய இயலுகின்றது.

### கதைத்தலைவனின் ஆற்றலை வெளிப்படுத்திட அமைக்கப்பட்ட கதைகள்

இராமனின் வில்லாற்றாலலையும் பின்னர் இராமன் இராவணனோடு நிகழ்த்தப்போகும் போருக்கான ஒத்திகைபோலவும் அமைந்ததாக தாடகைகதை உருவாக்கப்பட்டுள்ளது.

விசுவாமித்திரர் மேற்கொண்ட வேள்வியைக் காக்கச் சென்ற இராம இலக்குவர் தமக்கிடப்பட்ட பணியைச் செவ்வனே நிகழ்த்துவதுடன் அவளுடைய மகனான சுபாகுவையும் உணர்ந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இச்செயல்பாடு அமைந்தது. மேலும் பரசுராமன் தந்த விஷ்ணு வில்லை நானேற்றி அதனுடைய இலக்காக பரசுராமனின் தவமேன்மையை இராமன் கைக்கொண்ட நிலைகள் குறித்த கதைகள் இராமனின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. தன் தந்தையைக் கொன்ற அரசர்களை சத்திரியர்களை இருபத்தொரு தலைமுறைகளாகக் கொன்றளிப்பதாகச் சபதம் செய்துள்ள பரசுராமனை இராமன் வென்றதன் மூலம் இராமனின் சிறப்பை வெளிப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு பரசுராமன்கதை படைக்கப்பட்டுள்ளது.

### திருவடிச் சிறப்பு

இராமனின் திருவடிச்சிறப்பு விராதன், அகலிகை ஆகிய கதைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்படுள்ளது. இராமனின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அமைக்கப்பட்ட இக்கதைகள் இராமன் அவதரித்த நோக்கத்ததையும், அவனுடைய திருவடிச்சிறப்பையும் அறிந்து கொள்ள உதவியாக அமைகின்றன.

கௌதமமுனிவரின் பத்தினியாகிய அகலிகையைப் பெறுவதற்காக இந்திரன் மேற்கொண்ட தவறான செயல்பாடு காரணமாக, கௌதமரிடம் சாபம் பெறுகிறான். அகலிகை திருமாலுடைய இராம அவதாரத்தின் போது இராமனின் கால் துகள்பட்டு பழைய உருவடைவாள் என்ற சாபவிடையும் அம்முனிவனால் அவளுக்கு வழங்கப்படுகிறது. இராம இலக்குவர் விசுவாமிமத்திரருடன் மிதிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இராமனின் திருவடித்துகள் பட்டு, கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக மாறுகிறாள்.

### சீதையின் பிறப்பு பற்றிய கதை

காப்பியத்தலைவனை அறிமுகம் செய்வது போல தலைவியையும் அறிமுகம் செய்வது மரபு என்ற அடிப்படையில் சீதையின் பிறப்புப் பற்றிய கதை கூறப்பட்டுள்ளது. சனகன் புத்திரவேள்வி செய்வதற்காக வேள்விச்சாலையை உழும்போது கலப்பையின் நுனியில் கண்டெடுக்கப்பட்டவளாகச் சீதையின் பிறப்பு மூலநூலை அடியொற்றி கம்பரால் படைக்கப்பட்டுள்ளது.

**துணைமைப்பாத்திர அறிமுகம் குறித்த கதைகள்**

காப்பியத்தில் வரும் தலைமைப் பாத்திரத்தைச் சிறப்பிக்க வேண்டியும், தலைமைப் பாத்திரத்திற்கு உதவி புரிவதற்கும், காப்பியத்தை இடையீடின்றி நடத்திச் செல்வதற்கும். கவிஞன் துணைமைப் பாத்திரங்களைப் படைக்கிறான். தலைமைப் பாத்திரங்களைப் போலவே துணைப்பாத்திரங்களும் காப்பிய போக்கினுக்கு வலிமை சேர்ப்பவையாக அமைகின்றன. கதைச் சிக்கல்களைக் கட்டவிழ்க்கின்றவர்களாகவும், சில துணைமாந்தர்கள் திகழ்கின்றனர். இந்தவகையில் ஓரிரு இடங்களில் மட்டும் சொல்லப்பட்டிருந்தாலும் காப்பியத்திற்கு உதவும் வகையில் இடம் பெற்ற துணைப் பாத்திரங்கள் குறித்த கதைகளாக அகத்தியன்கதை. வாலி–சுக்ரீவன்கதை, சடாயு–சம்பாதிகதைகள் அமைந்துள்ளன.

**துணைமைப் பாத்திரச் சிறப்பை வெளிப்படுத்தும் கதைகள்**

இராமயணக்கதையில் அனுமனின் பங்கு ”சுந்தரகாண்டம்” என்ற ஒரு தனிக்காண்டத்தை அமைத்ததன் வழி வெளிப்படுகிறது. இராமனைச் சுக்ரீவனோடு நட்புக் கொள்ளச் செய்ததில் அனுமனுக்குப் பெரும் பங்கு உண்டு. பேச்சாற்றல், உய்த்துணரும்பாங்கு முதலிய சிறப்பான தகுதிகளைப் பெற்றிருத்த காரணத்தால்தான் இராமன் அனுமனைச் ”சொல்லின்செல்வன்” என அழைக்கிறான். மேலும் கடல்தாண்டி சீதை இருப்பிடத்தைக்கண்டு இராவணவ வதை நடைபெறச்செய்த சிறப்பிற்குரியவனாகவும் அனுமன் விளங்குகிறான். இந்த அடிப்படையில் அனுமனின் பெருமைகளை வெளிப்படுத்திட, அவன் கடல் தாண்டும்போது நடந்த நிகழ்வுகளைக் கம்பர் கிளைக்கதைகளாகப் படைத்துக் காட்டுகிறார்.

**பாத்திரச் செயல்பாட்டிற்கு வழிவகுக்கும் கதைகள்**

தலைமைப் பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்களின் செயல்பாடுகளே காப்பியத்தை நகர்த்திச் செல்கின்றன. இவ்வகையில் விசுவாமித்திரர், தாடகை வதத்திற்கு அழைத்துச் செல்லும்போது இராமனுக்குச் சொன்ன கதைகள் பின்னளில் அவனுடைய செயல்பாட்டைத் தீர்மானிப்பதாக அமைகின்றன.

விசுவாமித்திரர் இராம இலக்குவருக்குக் கற்றுக்கொடுத்த பலை,அதிபலை என்ற மந்திரங்கள் அவர்களது பிற்கால வாழ்க்கை முறைக்கும், அதனடிப்படையில் போர் வெற்றிக்கும் உதவிய நிலையை அறிய முடிகிறது. விசுவாமித்திரர் தன் தமக்கையான கௌசகி பற்றிய கதையைக் கூறுவது பெண்களின் கற்புமேன்மையை வெளிப்படுத்துகிறது.

பாற்கடல் கடைந்ததைக் குறிப்பிடும் விசாலநகரத்துக்கதை சமயோசிதமாகச் செயல்படும் தன்மையையும் சில இடங்களில் தந்திரமாகச் செயல்பட்டால்தான் வெற்றி பெறமுடியும் என்பதையும் வெளிப்படுத்துகிறது. கங்கைகதை இராமனுக்கு அவனது முன்னோர் பெருமையை எடுத்துக் கூறி இராமனும் அதனைப் போன்று செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.

காமாசிரமக்கதை புலனடக்கச்சிறப்பையும், தவமேன்மையையும் இராமனுக்கு உணர்த்துவதாய் அமைகிறது. சித்தாசிரமக்கதை வாமனஅவதாரச்சிறப்பைக் கூறுவதோடு மாவலியின் ஈகைத்திறத்தையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது.

**காப்பியக்கதைத் திருப்பத்திற்கு வழிவகுக்கும் கதைகள்**

இராமாவதாரத்தின் நோக்கம் இராவணவதமாகும். இராமன் அயோத்தியின் இளவரசனாக முடிசூட்டப்பட்டிருந்ததால் இராவணவதம் நிறைவேறாமல் இருந்திருக்கும்.

இராவணவதம் நிகழ இராமன் காடேகவேண்டும். அதற்கு அடிப்படையாகக் கொடுமனக்கூனியிடம் ஆலோசனையைப்பெற்ற கைகேயி, தசரதனிடத்தில் அவள் முன்பு சம்பராசுரப்போரின் போது பெற்ற இரண்டு வரங்களை நினைவுபடுத்தி, இராமன் பதினான்கு ஆண்டுகள் காடேக வேண்டும். பரதன் நாடாள வேண்டும் எனக் கேட்டு இராமனைக் காட்டிற்கு அனுப்புகிறாள். இக்கதை காப்பியநீட்சிக்கும், காப்பியதின் மையநோக்கத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது.

சலபோச முனிவரிடம் தசரதன் பெற்ற சாபமும் இராமன் காட்டிற்குச் செல்வதற்குக் காரணமாக அமைகிறது. இராவண வதத்தை நிகழ்த்துவதற்கு இராமன் காட்டிற்குச் செல்லவேண்டும். இராவணனால் சீதை சிறைபிடிக்கப்பட வேண்டும். இவை நிகழ்ந்திட வேண்டும் என்பதற்காக சம்பராசுரப்போர், தசரதன் பெற்ற சாப வரலாறு ஆகிய இரு கதைகளும் படைக்கப்பட்டுள்ளன. இவை காப்பியத்தின் முக்கியமான திருப்புமுனையாகவும் அமைகின்றன.

**எதிர்நிலைத் தலைவன் குறித்த கதைகள்**

கதைத்தலைவன் தலைவியாகிய இராமன், சீதை போன்றோரின் வரம், நற்பண்புகள், வீரம், குலப்பெருமை போன்றவற்றைப் பற்றிப் பேசுவது எவ்வளவு இன்றியமையாதனவோ, அதைப்போல் எதிர்நிலைத்தலைவனாகிய இராவணன் பற்றிப் பேசுவது காப்பியத்தின் வெற்றிக்கும், கதைநீட்சிக்கும் இன்றியமையாததாகிறது,

இராவணன் பெற்ற வெற்றிகளுக்கு, அவனுடைய பேராற்றல், சிவனிடமிருந்து பெற்ற பெருவரங்கள், அவர் வழங்கிய ஆயுதங்கள் போன்றவை காரணமாக அமைகின்றன. அவன் பெற்ற வெற்றிகள் அவனை அகந்தை கொள்ளச் செய்தன. இவ்வகந்தையின் காரணமாக அவன் மேற்கொண்ட பல செயல்பாடுகள், அவனுடைய பிற்காலத் தோல்விகளுக்கு அடிப்படையாக மாறின. இந்நிகழ்வுகளைக் கூறுவதன்வழி எதிர்நிலைத் தலைவனான இராவணன் அடைந்த தோல்விகளுக்கான அடிப்படையைக் காப்பியத்தைப் படிப்போர் உணர்ந்துகொள்ள முடியும் என்ற நோக்கில் கார்த்த வீரியனிடம் தோற்றது, நந்தியைப் பரிகசித்துப் பெற்ற சம்பவம், நாகபாசக்கதை போன்றவை படைக்கப்பட்டுள்ளன. இதன்வழி அகந்தை அழிவைத் தரும், எளியோரை எள்ளி நகைகயாடக்கூடாது புலப்படுகின்றன.

கம்பராமாயணத்தில் இடம்பெற்ற கம்பராமாயணக் கிளைக் கதைகளின் நோக்கங்கள் குறித்து ஆராய்ந்ததில் கிடைத்த சில முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- கம்பர் 34 கிளைக்கதைகளைத் தம் காப்பியத்தில் பயன்படுத்தியுள்ளார்.
- இவை பாத்திரங்களின் சிறப்பை வெளிப்படுத்துவதற்காகவும் கதைத் திருப்பத்திற்காகவும், எதிர்நிலைத் தலைவன் குறித்த நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- கதைத் தொடர்ச்சிக்காகவும். காப்பிய நீட்சிக்காகவும், பாத்திரங்களின் சிறப்புகளை மேலோங்கச் செய்வதற்காகவும் கிளைக்கதைகள் படைக்கப்பட்டுள்ளன.
- இராமன் திருமாலின் அவதாரம் என்பதைத் தெளிவுபடுத்துவற்காக திருஅவதாரக்கதை படைக்கப்பட்டுள்ளது.
- இராமனின் வில்லாற்றலையும், இராவண வதத்திற்கான ஒத்திகை போலவும் தாடகைகதை உருவாக்கப்பட்டுள்ளது.

- விராதன் அகலிகை கதைகள் வாயிலாக இராமனின் திருவடிச்சிறப்பு வெளிப்டுத்தப்பட்டுள்ளது.
- மூலநூலில் இல்லாது கம்பராமாயணத்தில் மட்டுமே உள்ள கிளைக்கதையாக இரணியன் கதை அமைந்துள்ளது.
- இராமனின் இறைத்தன்மையை விளக்குவதற்கு சரபங்கன் சபரி கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- கதையோட்டத்திற்கு வலிமை சேர்ப்பதாக அகத்தியன் வாலி–சுக்ரீவன், சடாயு–சம்பாதி கதைகள் அமைந்துள்ளன.
- துணைமைப் பாத்திரச் சிறப்பை வெளிப்படுத்தும் கதைகளாக அனுமனின் கதைகள் இடம் பெற்றுள்ளன.
- எதிர்நிலைத் தலைவன் குறித்த கதைகளாக இராமனின் வரங்களும் சாபங்களும் விளக்கப்பட்டுள்ளன.

**துணைநூல் பட்டியல்**

1. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம் சென்னை, 1965.
2. அ. பாண்டுரங்கன், கம்பராமாயணமும் காப்பியக் கொள்கையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1987.
3. கே.பி. சங்கர்லால், சிலம்பில் கிளைக்கதைகள், எ.எஸ்.வெளியீடு, மதுரை, 1973.
4. வ.வே சுப்பிரமணி அய்யர், கம்பராமாயண ரசனை, தமிழ்ப்பதிப்பகம், சென்னை,1976.